செ.வெ.எண் -03 நாள்:02.02.2018

பத்திரிக்கைச் செய்தி

## 09.02.2018 முதல் 22.02.2018 வரை இருவாரங்கள் கோழிகளுக்கான "கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசிப்பணி முகாம்"

கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் கோழிக்கழிச்சல் நோய் தடுப்பு இருவார முகாம் நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாண்டும் **09.02.2018 முதல் 22.02.2018** வரை இருவாரங்கள் கோழிகளுக்கான **"கோழிக்கழிச்சல் நோய் தடுப்பூசிப்பணி முகாம்"** அரியலூர் மாவட்டத்தில் அனைத்து கிராமங்களிலும் நடைபெற உள்ளது.

இம்முகாமில் 8 வாரம் மற்றும் அதற்கு மேற்பட்ட அனைத்து கோழிகளுக்கும் இந்த தடுப்பூசி மேற்கொள்ளப்பட உள்ளது. எனவே அனைத்து கோழிவளர்ப்போர் மற்றும் விவசாயிகள் இம்முகாமில் கலந்து கொண்டு தங்கள் கோழிகளுக்கு தடுப்பூசி போட்டு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.